## (**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 387/2019 அ.சா.11

| | | |
|---|---|---|
| Name | : | **திரு.** டாக்டர்**.** சரவணன் |
| Father's name | : | |
| Village | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.08.2026.

**( எதிரி வீடியோ கான்பரன்ஸ் மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் நிலைய மருத்துவ அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.07.2019ம் தேதியன்று காலை 10.00 மணியளவில் அவனியாபுரம் காவல்நிலைய ஆய்வாளரின் வேண்டுகோளை ஏற்று காவலர் ஜெயக்கண்ணன் அடையாளம் காட்டிய சுமார் 25 வயது மதிக்கத்தக்க வினோத் என்ற ஆண் பிரேதத்தை சடலக்கூறாய்வு செய்தேன். அந்த சடலமானது உடல் முழுவதும் விரைப்பு தன்மையுடனும், நடுத்தர ஊட்டத்துடனும், கை, கால், விரல்கள் நீலத்துடனும், இரண்டு கண் பகுதிகளில் வீங்கியும், கருத்தும் காணப்பட்டது. அப்பிரேதத்தில் காணப்பட்ட இறப்பிற்கு முந்தைய காயங்கள் பின்வருமாறு

1) சிகிச்சை தையலிடப்பட்ட குறுக்குவட்டான சிதைந்த காயமானது 6 செ.மீ X 1 செ.மீ எலும்பு ஆழத்துடன் முன் தலையின் நடுப்பகுதியில் காணப்பட்டது.

2 ) சிகிச்சை தையலிடப்பட்ட குறுக்கு வட்டான சிதைந்த காயமானது 9 செ.மீ X 1 செ.மீ எலும்பு ஆழத்துடன் இரு கண் புருவங்களுக்கு இடையில் முதல் காயத்திலிருந்து 4 செ.மீ கீழ் புறமாக காணப்பட்டது.

3 ) சாய்வான சிதைந்த காயமானது 2 செ.மீ X 2 செ.மீ மேல் உதட்டு பகுதியில் காணப்பட்டது.

தலையை கூறாய்வு செய்ததில் 17 செ.மீ X 13 செ.மீ அளவிலான கன்றிய காயமும் வலது முன், பக்க, ஓர தலையின் தோல்–க்கு அடியில் காணப்பட்டது. 10 செ.மீ X 7 செ.மீ அளவிலான கன்றிய காயம் இடது முன், பக்கவாட்டு தலையின் தோல்–க்கு அடியில் காணப்பட்டது. முன் கபால பகுதியில் நடுப்புரத்தில் 8 செ.மீ X 5 செ.மீ X 1 செ.மீ அளவிலான கீழ் அழுந்திய எலும்பு முறிவு காணப்பட்டது. இரு புற மூளையின் சவ்வு பகுதிகளிலும் இரத்தமானது பரந்தும், உரைந்தும் காணப்பட்டது. 7 செ.மீ அளவிலான எலும்பு முறிவு அடி கபாலத்தின் முன்பகுதியில் காணப்பட்டது.

இதர உள்ளுறுப்புகளில் மார்பு கூடறை, வயிற்று கூடறை காலியாக காணப்பட்டது. இதய சவ்வு பகுதிகளில் 15 மில்லி லிட்டர் வைக்கோல் நிற திரவமும் இதயத்தின் வலது அறையில் திரவ இரத்தமும், இடது அறை காலியாகவும் இதய தமணி சீராகவும் இருந்தது. நுரையீரல் வெட்டு தோற்றத்தில் இரத்தம் சிதைவுடனும், தொண்டை, மூச்சுக்குழாய், நாவடி எலும்பு சீராக இருந்தது. இரைப்பையில் 50 மில்லி லிட்டர் மரநிற திரவம் எவ்வித நெடியும் இன்றியும் அதன் சிலேத்துமம் சீராகவும் இருந்தது. கல்லீரல், மண்ணீரல் சீறுநீரகங்கள் வெட்டு தோற்றத்தில் இரத்த செறிவுடனும், சிறுகுடல் பகுதியில் 20 மில்லி லிட்டர் பித்த நிற திரவமும் எவ்வித நெடியும் இன்றியும் அதன் சிலேத்துமம் சீராகவும் இருந்தது. சிறுநீர்ப்பை காலியாக காணப்பட்டது. உள்ளுறுப்புகள் இராசயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு, பெறப்பட்ட முடிவின் அடிப்படையில் எனது கருத்துரையானது மேற்படி நபர் தனக்கு ஏற்பட்ட கபாலம் மற்றும் மூளை காயத்தால் பிரேத பரிசோதனைக்கு 20.00 மணியிலிருந்து 24.00 மணி நேரத்திற்கு முன்பாக இறந்திருக்கக்கூடும் என சான்று அளித்தேன். நான் வழங்கிய **பிரேத**

**கூறாய்வு அறிக்கை மற்றும் கருத்துரை அ.சா—ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :—**

இறந்தவருக்கு ஏற்ப்பட்ட காயங்கள் பெரிய கற்களால் தாக்கும்போது ஏற்பட வாய்ப்புண்டு. ஆய்வாளர் என்னிடம் எந்த ஆயுதத்தையும் காட்டி என்னை விசாரிக்கவில்லை.

**மறு விசாரணை —** இல்லை.

Sd/- சரவணன்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.08.04 07:13:23 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.